# மணப்பாறை நகராட்சி

## 2010 – 2011 ஆம் ஆண்டு நிர்வாக

## அறிக்கை

# <u>மணப்பாறை நகராட்சி</u>
# <u>2010 – 2011 ஆம் ஆண்டு நிர்வாக அறிக்கை</u>

## <u>1) அமைப்பும் மேலாண்மை:</u>

இந்நகராட்சி 1.10.1966– ம் தேதியிலிருந்து 30.9.66 ஆம் தேதிய ஊரக வளர்ச்சித்துறை அரசாணை எண்.2318ன் படி 3–ஆம் நிலை நகராட்சியாக உத்திரவிடப்பட்டுள்ளது. இந்நகராட்சி எல்லையில் கண்ணுடையான் பட்டி, கலிங்கபட்டி, உசிலம்பட்டி ஆகிய வருவாய் கிராமங்களும், அதனுள் அடங்கிய குக்கிராமங்களும் இருந்தன. (செவலூார் தாய் கிராமம் தவிர) கண்ணுடையான்பட்டி, கலிங்கப்பட்டி உசிலம்பட்டி ஆகியவைகளை 9.4.74 ம் தேதி 1059ம் எண். கொண்ட அரசாணையின்படி பிரிக்கப்பட்டு, பஞ்சாயத்துக்களுடன் இணைக்கபட்டது. மணப்பாறை நகர் பஞ்சாயத்து பகுதி மட்டும் தற்போதைய நகராட்சியாக இருந்து வருகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 28.6.78 ஆம் தேதிய அரசாணை எண். 1087ன் படி 1.7.78ஆம் தேதியிலிருந்து இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. நகராட்சி நகர் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண். 85 நாள் 22.5.98 தேதிய ஆணையின்படி மணப்பாறை முதல்நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது.

இந்நகராட்சி 1.11.67 தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை உத்திரவு எண்.2126 ன் படி 18 தொகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தது. அதற்குபின் இந்நகராட்சி 4.7.74 ஆம் தேதி உள்ளாட்சி உத்திரவு எண்.1602 ன் படி 20 தொகுதிகளாக பிரிக்கப்பட்டு இருந்தது.

| | | |
|---|---|---|
| 1) | நகர பரப்பளவு | : 20.85 சதுரகிலோ மீட்டர் |
| 2) | மக்கள் தொகை 40178) | : 35770 (2011ன்படி |
| 3) | நகர்மன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை | : 27 |
| | நகராட்சியின் நிலை | : முதல்நிலை நகராட்சியாகும் |
| நகராட்சி எல்லைக்குள் அடஙகியுள்ள வருவாய் கிராமஙகள் | | : செவலூார், |

***<u>மன்றம்:</u>***

அரசு ஆணை எண். 135 மற்றும் 136 ன் படி நகராட்சி பகுதி 27 வார்டுகளாக பிரிக்கப்பட்டு 15.10.2006ல் நகர்மன்றத்தேர்தல் நடத்தப்பட்டது. 27 வார்டுகளில் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு ஒதுக்கப்பட்ட வார்டுகள் 1, 3, 17 இதில் தாழ்த்தப்பட்ட பிரிவு பெண்களுக்கு 1 – வது வார்டும் மற்றும் பெண்கள் வார்டுகள் (பொது) 8 ஆக மொத்தம் பெண்கள் வார்டு 9 ஆகும் .

***<u>கூட்டஙகள்</u>***

மாதந்தோறும் சாதாரணக்கூட்டம் மற்றும் அவசர நிமித்தம் அவசரக்கூட்டம் கூட்டப்பட்டது. அறிக்கை ஆண்டில் கூட்டப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை.

1.4.2010 முதல் 31.3.2011 முடிய கூட்டப்பட்ட கூட்டங்களின் விபரம்

| | கூட்டம் | பொருள்கள் |
|---|---|---|
| ஒப்பந்தக்குழு கூட்டம் | -- | -- |
| சாதாரணக்கூட்டம் | 5 | |
| அவசரக்கூட்டம் | 8 | |
| சிறப்புக்கூட்டம் | - | -- |
| நியமனக்குழு கூட்டம் | 1 | |

2. <u>பணியில் ஈடுபட்டுள்ளவர்கள்:</u>

| | | |
|---|---|---|
| **ஆணையர்** | : | 1. திரு.சு.அருணாசலம்<br>ஆணையர்<br>1.4.2010 முதல் 19.11.2010<br>2. திருமதி.க.உமாமகேஸ்வரி<br>ஆணையர்<br>8.2.2011 முதல் 31.3.2011 |
| நகராட்சி பொறியாளர் | : | 1. திரு.எம்.குணசேகரன்,<br>நகராட்சி பொறியாளர்<br>1.04.10 முதல் 30.04.2010<br>2. திரு.ஐ.நக்கீரன்<br>நகராட்சி பொறியாளர்,<br>3.8.2010 முதல் 31.3.2011 |
| துப்புரவு ஆய்வர்கள் | : | 1. திரு. பி.செந்தில்குமார்<br>சுகாதார ஆய்வர்<br>1.6.2010 முதல் 12.08.2010<br>2 திரு. ம.பூபதி<br>துப்புரவு ஆய்வர்<br>05.08.10 முதல் 31.3.2011<br>3. திரு.அ.ராஜகோபால்<br>03.01.2011 முதல் 31.3.2011 |
| மேலாளர் | : | 1. திரு.எஸ்.ஜெயசந்திரன்<br>மேலாளர்<br>1.4.2010முதல்31.3.2011<br>2. திரு.து.யோகராஜ்<br>கணக்கர்<br>27.10.2010 முதல் 31.3.2011 |

***வழக்குகள் மற்றும் சட்ட செலவுகள்:***

| | |
|---|---|
| ஆண்டு இறுதியில் முடிவு பெறாத வழக்குகள் | : 84 |
| அறிக்கைஆண்டில் வழக்கறிஞருக்கு கொடுக்கப்பட்ட தொகை | : 37740 |
| சென்ற ஆண்டு செலவிடப்பட்டதொகை | : 32750 |

***4) பொறியாளர்*** பிரிவு

இந்நகராட்சியில் மூன்றாம்நிலை நகராட்சிப் பொறியாளர் பதவி ஏற்படுத்தபப்பட்டது. அறிக்கை ஆண்டில் திரு.ஐ.நக்கீரன் நகராட்சி பொறியாளராக பணியாற்றி வந்துள்ளார்.

அறிக்கை ஆண்டில் பொதுப்பணி பணியாளர்கள் சம்பளம் ரூபாய் 96 லட்சம் வழஙகப்பட்டது.

**போக்குவரத்துக்கள்: சாலைகள், பாலஙகள், கரிசல் கற்கட்டிடஙகள்**
**சாலைகள்:**

இந்நகராட்சி வழியாகச்செல்லும் தேசிய நெடுஞ்சாலைகளும் மாநில நெடுவழிச்சாலைகளின் விவரஙகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) சென்னையிலிருந்து கன்னியாகுமரிவரை | | தேசியநெடுஞ்சாலை ( எண். எச். 45) |
| 2) மணப்பாறை | : | துவரஙகுறிச்சி மாநில நெடுவழிச்சாலை |
| 3) மணப்பாறை | : | ஆண்டிப்பட்டி சாலை |
| 4) மணப்பாறை | : | கோவில்பட்டி சாலை |
| 5) மணப்பாறை | : | குளித்தலை சாலை |

தற்பொழுது அனைத்து தார்சாலைகளும் திருப்திகரமாக பராமரிக்கப்பட்டுவருகிறது.

**நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் சாலை விவரஙகள் வருமாறு.**

| | | | |
|---|---|---|---|
| 1þ) | சிமெண்ட் சாலை | : | 12.85 கி.மீ |
| 2) | தார் சாலைகள் | : | 55.88 கி.மீ |
| 4) | மண் சாலை | : | – |
| | | : | 68.73 கி.மீ |

5) நகராட்சி சாலைகள் பராமரிப்பிற்கு 7 சாலை பணியாளர்களில் 6 சாலைப்பணியாளர்கள் பணி ஒய்வு மற்றும் பணியிடை காலமானதால் 1

சாலைப்பணியாளரைக் கொண்டு சாலைகள் பராமரிக்கப்படுகிறது. மேலும் நகராட்சிக்கு சொந்தமான கற்பாறைகளோ, செம்பூரான் பாறைகளோ இல்லை.

<u>6)(அ) உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள்</u>

1. அரசினர் மேல்நிலைப்பள்ளிகள், ஆண்கள் 1 பெண்கள் –1
2. சிறுமலர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி
3. புனித அந்தோணியார் உயர்நிலைப்பள்ளி
4. புனித ஆந்திரேயா உயர்நிலைப்பள்ளி
5. லட்சுமி மெட்ரிக்குலேஷன் உயர்நிலைப்பள்ளி

7) <u>(ஆ) தனியார் பள்ளிகள் பொது நூல் நிலையஙகள்</u>

பொது நூல் நிலையஙகள் அறிக்கையாண்டில் நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை. ஆனால் மாவட்ட கிளை நூலகம் ஒன்று இந்நகரில் பராமரிக்கப்படுகிறது.

8) <u>(ஆ) சந்தைக்கு மற்றும் விழாக்களுக்கு தண்ணீர் வசதி</u>

அறிக்கை ஆண்டில் உள்ளூர் முக்கியத்துவம் பெற்ற திருவிழாக்களும் வாரச்சந்தையும் வழக்கம்போல் நடைபெற்றது, தேவையான சுகாதாரப்பணிகள் செய்து முடிக்கப்பட்டது. இந்நகராட்சி பகுதிக்கு காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்பாட்டில் 9 குடிநீர் விநியோகத்தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் ஒருநாளைக்கு சுமார் 28.80 லட்சம் லிட்டர் கொடுக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| பொதுக்குழாய்கள் | –– | 174 |
| வீட்டுக்குழாய் இணைப்புகள் | –– | 5171 |

*9) <u>சாக்கடை</u>*

இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் ஏதும் இல்லை திறந்தவெளி கால்வாய் 39.83 கி.மீ. திறந்தவெளி கால்வாய் ( மண் கால்வாய்) 6.35 கி.மீ. பராமரிக்கப்பட்டு வருகிறது.

**10.)** இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள சாலைகள் பராமரிப்பு செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றப்பட்டு, சாலைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளது. நகராட்சி எல்லையில் மாமுண்டி ஆறு செல்கிறது.

*<u>தெருவிளக்கு வசதி:</u>*

அறிக்கை ஆண்டில் பராமரிக்கப்பட்ட விளக்குகளின் மொத்த எண்ணிக்கை விவரம்

| | | |
|---|---|---|
| 1. 40 வாட்ஸ் குழல் விளக்கு | –– | 1505 |
| 2. சோடியம் – வேப்பர் விளக்கு | –– | 215 |
| 3, மெர்குரி விளக்கு | – | 8 |
| 4. CFL விளக்கு | – | 20 |
| மொத்தம் | – | 1728 |

## *10) பொது நலம் மருத்துவ உதவி*

இந்நகராட்சி எல்லைக்குள் 14 தனியார் மருத்துவ மனைகளும் 1 அரசு மருத்துவ மனையும் உள்ளன.

### *தனியார் மருத்துவ மனைகள் விவரம்*

1) மோகன்தாஸ கிளினிக்
2) ரெத்தினதாஸ நர்சிஙஹோம்
3) பாண்டியன் கிளினிக்
4) நசுருதீன் கிளினிக்
5) முருகேசன் கிளினிக்
6) சிந்துஜா மருத்துவமனை
7) செல்வம் கிளினிக்
8) தயாள் கிளினிக்
9) செல்வி சேகர் கிளினிக்
10) ராசி கிளினிக்
11) லதா நர்சிஙஹோம்
12) ஜெயம் மருத்துவமனை
13) மணவை கிளினிக்
14) பாலாஜி நர்சிங ஹோம்

### அரசு மருத்துவமனை

1. அரசு மருத்துவமனை

இந்நகராட்சியின் கீழ் மருத்துவமனைகள் எதும் பராமரிக்கப்படவில்லை இரண்டு சுகாதார ஆய்வாளர்கள் அறிக்கை ஆண்டில் பணிபுரிந்து வருகின்றனர். அறிக்கை ஆண்டில் சுகாதாரத்தைப்பற்றிய பிரசுரஙகள் சுகாதார சிப்பந்திகளைக்கொண்டு விளம்பரம் செய்யப்பட்டு விழிப்புணர்சி ஏற்படுத்தப்பட்டது மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் கொண்டு 27 வார்டுகளில் அவ்வப்போது திடக்கழிவு மேலாண்மை தொடர்பாக கூட்டஙகள் நடத்தப்பட்டு வருகிறது.

## *13). இடவசதி தளவாடஙகள்:*

அரசு மருத்துவமனை, நகராட்சி சொந்தக்கட்டிடத்தில் இயஙகி வந்தது அரசு மருத்துவமனையாக்கப்பட்ட பின்பு கட்டிடத்தை அரசிடம் ஒப்படைக்கப்பட்டது.

## *14) பொது சுகாதாரம்:*

இந்நகராட்சியில் நகர் நல அலுவலர் பதவி இல்லை அறிக்கை ஆண்டில் சுகாதார ஆய்வர்கள் இருவர், துப்புரவு மேற்பார்வையாளர்கள் 4 நபர்கள் மற்றும் துப்புரவுப்பணியாளர்கள் 68 நபர் பணிபுரிந்து வருகின்றனர். இத்தலைப்பின் சம்பளம் மற்றும் இதரவகையினர் நடப்பு ஆண்டில் ரூ.96.26 லட்சம் செலவாகியுள்ளது. சென்ற ஆண்டில் 2009—10ல் ரூ.84.08 லட்சம் செலவாகியது.

## *15) பிறப்பு விகிதம், மற்றும் மகப்பேறு உதவி*

அறிக்கையாண்டில் பிறப்பு, இறப்புகளை பதிவு செய்யும் பணியை சுகாதார ஆய்வாளர் பதவிக்குரிய முழு அதிகாரம் பெற்ற இரண்டு சுகாதார ஆய்வர்கள் பார்த்து வருகிறார்கள். நகராட்சி பராமரிப்பின்கீழ் இருந்து வந்த மகப்பேறு நிலையம் **5.5.72ல்** அரசு பராமரிப்பில் ஒப்படைக்கப்பட்டது. பிறப்புகள் பதிவு செய்வதில் அறிக்கை ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பிறப்புகள் **7926** ஆகும். நகராட்சி நிர்வாகத்தின் கீழ் பிள்ளைப்பேறு பார்க்கப்படவில்லை.

நகராட்சியால் அறிக்கையாண்டில் மகப்பேறு இல்லை குழந்தைகள் காப்பகம் பராமரிக்கப்படவில்லை.

## *16) இறப்பு விகிதம் மற்றும் தொற்று நோய்கள்:*

1) அறிக்கையாண்டில் பதிவு செய்யப்பட்ட இறப்புகள் –– 317
2) காலரா, அம்மைபோன்ற பல்வேறு நோய்கள் மூலம் இறப்புகள் ஏதும் இல்லை மற்ற நோய்கள் மூலம் ஏற்பட்ட மரணம் குறித்த விளக்கம் கீழ்கண்டவாறு உள்ளன. – இல்லை

| | *சென்ற ஆண்டில்* | *அறிக்கை ஆண்டில்* | |
|---|---|---|---|
| 1) | காலரா | –– | இல்லை |
| 2) | அம்மை | –– | இல்லை |
| 3) | பிளேக் | –– | இல்லை |
| 4) | மலேரியா | –– | இல்லை |
| 5) | சீதபேதி | –– | இல்லை |
| 6) | காய்ச்சல் | –– | இல்லை |
| 7) | பிறமூச்சுவை நோய்கள் | –– | இல்லை |
| 8) | பிறகாரணஙகளால் | –– | இல்லை |
| 9) | வெறிநாய் கடியினால் இறப்பு | –– | இல்லை |

இந்நகராட்சியில் கொசுத்தடுப்பு ஒழிப்புத்திட்டம் செயல்பட்டு வருகிறது. பொது சுகாதார இயக்குநர், முதுநிலை பூச்சியியல் வல்லுநர் அறிவுரைகளின்படி, Egg, larva, Pupaadult, Stage க்கு பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பான் மூலம் கொசு உற்பத்தி ஒழிக்கப்பட்டு வருகிறது. பொதுவாக தண்ணீர் தேஙகி உள்ள இடஙகளில் மருந்து தெளிக்கப்பட்டது மற்றும் டெக்னிகல் மாலத்தியான் கொண்டு கொசு மருந்து புகைஇயந்திரம் மூலம் புகைபரவச்செய்து கொசுக்களை அழிக்கப்பட்டும் வருகிறது.

## *17) கொக்கிப்புழு தொற்று:*

அறிக்கை ஆண்டில் இந்நோய் நகராட்சிப்பகுதியில் இல்லை.

## *18) நோய்தடுப்புத்திட்டம்:*

இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள குழந்தைகளுக்கு ஆரம்ப சுகாதாரப்பணியாளர்கள் மூலமாக சொட்டுமருந்து ஒவ்வொரு புதன்

கிழமையும், வழஙகப்பட்டுவருகிறது. ஆண்டுதோறும் பள்ளிக்கான வாழ்வொளித் திட்டம் மூலம் மாணவ, மாணவியர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இத்திட்டம் துணை இயக்குநர், பொது சுகாதாரம், திருசசி அவர்களின் உத்திரவின்படி, புத்தாநத்தம் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ குழுவினால் நடத்தப்பட்டு வருகிறது.

***19) குடும்ப நலத்திட்டம்:***

குடும்ப நலத்திட்டத்திற்கென அலுவலர் எவரும் தனியாக நியமனம் செய்யப்படவில்லை.

**20) சிறுசேமிப்பு:**

சிறுசேமிப்பு திட்டத்தின் கீழ் மாவட்ட, ஆட்சித் தலைவரால் இந்நகராட்சிக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ரூ.100 இலட்சம் சிறுசேமிப்பு இலக்கு எட்டப்பட்டது.

***21) பொதுசுகாதாரம் துப்புரவு பாதுகாப்பு:***

அறிக்கை ஆண்டில் 13 பொதுக்கழிவறைகளும், 2 சிறுநீர் கழிவறைகளும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. காலை, மாலை இருமுறை தெருக்கள் கூட்டி சுத்தம் செய்யப்பட்டு குப்பைகள் நகராட்சி லாரிகள் மூலமாகவும் திருச்சி – திண்டுக்கல் பைபாஸ் ரோட்டில் உள்ள உரக்கிடஙகில் கொட்டப்பட்டு வருகிறது.

நகரில் உள்ள கழிவு நீர் கால்வாய்கள் முழுதும் காலை ஒரு முறை சுத்தம் செய்யப்படுகிறது. மேற்படி பணிகளை நான்கு மேற்பார்வையாளர் மூலம் மேற்பார்வையில் செய்யப்படுகிறது. மேலும், உரக்கலவைக்கு ஒரு கலவை உரத்தொழிலாளியும், ஒட்டுநரும் பணிபுரிந்து வருகின்றனர். நகரின் சேகரிக்கப்படும் குப்பைகளை இரண்டு லாரி மூலம் தினந்தோறும் அப்புறப்படுத்தப்படுகிறது.

நடப்பு ஆண்டில் மேலும், சுகாதாரத்தை மேம்படுத்த கூடுதலாக ஒரு குப்பை எடுக்கும் லாரி ஒன்று வாஙகி சுகாதாரப்பரிவில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**22) வீட்டு மனை அறைகள்:**

நகராட்சியில் 12174 மொத்த குடியிருப்புகள் உள்ளது. இதில் மல அறைகள் உள்ள குடியிருப்பு 8126, 825 வீடுகளுக்கு குறைந்த செலவிலான கழிப்பறைகள் கட்டும் திட்டத்தின் கீழ் ரு.21.55 லட்சம் செலவில் மல அறை கட்டிக்கொடுக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது. மல அறைகள் இல்லாத வீடுகளுக்கு மல அறை கட்டிக்கொடுக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது மல அறைகள் இல்லாத வீடுகளுக்கு மல அறைகட்ட அறிவிப்பு கொடுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

துப்புரவுப்பணியாளர்கள் துப்புரவு பணிகளை செவ்வனே செய்து வருகின்றனர்.

நகராட்சியில் யானைக்கால் ஒழிப்புத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு மருந்து தெளிக்கும் பணியாளர்கள் இருவர் பணிபுரிந்து வருகின்றார். நகராட்சி பகுதி ஆறு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு வாரம் ஒரு முறை கொசு லார்வா ஒழிப்பு தெளிக்கப்படுகிறது. பணியை சுகாதார ஆய்வாளர்களால் கண்காணிக்கப்படுகிறது. நகரில் கொசு உற்பத்தியினை குறைக்க தேவையான நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

23. ***கலவை உரம்***

இந்நகராட்சி விராலிமலை சாலையில் சர்வே எண். 491 ல் சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பில் குப்பை சேகரிக்கும் இடம் அமைந்திருந்தது. அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கையின்படி, மாற்றி அமைக்க, இடம் தேர்வு செய்தும் பணி நடைபெற்று வருகிறது. பொதுமக்கள் ஆட்சேபனை காரணமாக உரம் சேகரிக்கப்படவில்லை. கடந்த 93–ம் வருடம் முதல் கலவை உரம் எதுவும் உற்பத்தி செய்யப்படவில்லை. 1993 வருடம் முதல் செவலூார் ரோட்டில் உள்ள உரக்கிடங்கில் குப்பைகள் கொட்டப்பட்டு வருகிறது. மேலும், கலவை உரம் தயாறிக்க கே. பெரியப்பட்டி என்ற இடத்தில் 10.01 ஏக்கர் வாஙகப்பட்டுள்ளது.

***24. உணவு கலப்பட தடைச்சட்டம்:***

அறிக்கையாண்டில் உணவு கலப்பட தடைச்சட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற சுகாதார ஆய்வாளர் ஒருவர் பணியில் உள்ளார். உணவு மாதிரிகள் மட்டுமே எடுக்கப்பட்டது.

உணவு கலப்பட தடைச்சட்டத்தில் நிலுவை வழக்குகள் 4 உள்ளது அறிக்கையாண்டில் அபாயகரமானதும் அருவருக்கத் தக்கதுமான மற்றும் உணவு கலப்பட தொழில்களுக்கும் உரிமையாணை 426 வழஙகப்பட்டுள்ளது. அதன் மூலம் வந்த வருமானம் ரூ 125126/– ஆகும். சென்ற ஆண்டில் 422 உரிமை ஆணைகள் வழஙகப்பட்டு அதன் மூலம் வந்த வருமானம் ரூ.126126/– ஆகும்.

***25).*** வாடகைக்கு ஓடும் கார்கள் தனியாரால் நடத்தப்பட்டு வருகிறது.

**26)** சந்தைகள், வண்டி நிலையஙகள், பேரூந்து நிலையஙகள் ஆடுவதை நிலையம், நகராட்சியால் பராமரிக்கப்படுகின்றன.

அறிக்கையாண்டிலும், அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளில் கிடைத்த வருமானம் பின்வருமாறு.

| ***ஆண்டு*** | ***சந்தை*** | ***பேருந்து நிலையம்*** | ***ஆடுவதை சாலை*** |
|---|---|---|---|
| 2006 –2007 | 24.14 லட்சம் | 5.01 லட்சம் | 0.06 லட்சம் |
| 2007–2008 | 24.41 லட்சம் | 5.93 லட்சம் | 0.05 லட்சம் |
| 2008–2009 | 30.61 லட்சம் | 4.76 லட்சம் | 0.12 லட்சம் |
| 2009–2010 | 25.06 லட்சம் | 4.76 லட்சம் | 0.30 லட்சம் |
| 2010–2011 | 27.25 லட்சம் | 5.00 லட்சம் | 0.32 லட்சம் |

***27) சந்தைகள்:***

இந்நகர் மன்றம் தினசரி நாளஙகாடி ஒன்றினையும் வாரச்சந்தை காய்கனி சந்தை ஆக இரண்டு சந்தைகளும் தனித்தனியாக பராமரிக்கப்பட்டு வருகிறது. நாளஙகாடியில் 36 பெரிய கடைகளும் 26 சிறிய கடைகளும் கட்டப்பட்டுள்ளன. கடைகள் அனைத்தும் பொது ஏலம் மூலம் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. மேற்படி கடைகள் மூலம் அறிக்கையாண்டில் ரூ.6.43 லட்சம் வருமானம் வரப்பெற்றது.

தனியார் நிறுவாகத்தில் இயஙகும் பொது சந்தைகள் இல்லை.

**28) பேரூந்து நிலையம்**

அரசினாின் பாதிமான்யம் பாதி கடன் திட்டத்தின் கீழ் 1997 ம் ஆண்டு பேரூந்து நிலையம் மற்றும் கடைகள் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. பேரூந்து நிலையக்கட்டிடஙகளில் பொதுமக்கள் பயனுக்காக ஆண், பெண் பயணிகள் பயனுக்கு தனித்தனியாக ஓய்வு அறைகளும் அமைக்கப்பட்டுள்ளது. இப்பேரூந்து நிலையத்தில் 10 பேரூந்துகள் ஒரே நேரத்தில் நிற்க மேடை அமைப்பு உள்ளது, பேரூந்து நிலையத்திற்கு ’சி’ தகுதி தரப்பட்டுள்ளது. இந்நகராட்சி திருச்சி, மதுரை தேசிய நெடுஞ்சாலையின் மத்திய பகுதியாகும், கரூர் புதுக்கோட்டை முக்கிய சாலையின் பிரதான நகரமாக அமையப்பெற்றுள்ளது. மேலும், இந்நகர் வாணிப நகரமாகும் இந்நகராட்சியில் பராமரிக்கப்படும் பொது வாரச்சந்தைகள் தமிழகத்தின் தலை சிறந்த புகழ்மிக்க சந்தையாகும். இக்காரணஙகளினால் இந்நகராட்சியால் அமைக்கப்பட்ட பேருந்து நிலையம் பொதுமக்களுக்கும், வணிகர்களுக்கும் பயனுள்ளதாகவும் மற்றும் சிறப்புறவும் விளஙகுகிறது.

நகராட்சி பேரூந்து நிலையத்திற்கு நாளொன்றுக்கு சராசரியாக 210 பேரூந்துகள் வந்து செல்கின்றன. அறிக்கையாண்டில் பேரூந்து நிலைய வசூலை பொது ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இதன் மூலம் வருமானம் ரூ. 500063/– கிடைக்கப்பெற்றுள்ளது. பேரூந்து நிலையத்தில் உள்ள 17 கடைகள் கட்டப்பட்டு ஏலம் மூலம் வாடகைக்கு விடப்பட்டுள்ளது.

***29) மிதிவண்டி மற்றும் மொபட் நிறுத்தும் இடம் :***

அறிக்கையாண்டில் அலுவலக வளாகத்தில் மிதிவண்டி மற்றும் மொபட் நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கப்பட்டு, ஏலம் விடப்பட்டுள்ளது. 12 மணி நேரத்திறகு மிதி வண்டிக்கு ரூ.1.00 மொபட் ஒன்றுக்கு நாள். ஒன்றுக்கு 2.00 வீதம் வசூல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் வருமானம் ரூ. 317625/–

***30 வாடகை உந்து நிலையம்.***

வாடகை உந்துபிலையம் இந்நகராட்சியில் பராமரிக்கப்படவில்லை.

***31. சாலையோர மரஙகள்***

சாலை ஓர மரஙகள், இந்நகர்மன்றம் பராமரித்து வருகிறது. மரஙகளின் பலனை அனுபவித்துக்கொள்ளும் உரிமையை பொது ஏலத்தில் விடப்பட்டதில் அறிக்கை ஆண்டில் கட்டணம் 25000/–– வரப்பெற்றுள்ளது. சென்ற ஆண்டு வருமானம் ரூ.25500/–

***32. நகரமைப்பு பிரிவு***

அறிக்கை ஆண்டில் நகரமைப்பு பிரிவில் கீழ்க்கண்ட பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

நகரமைப்பு ஆய்வர் –– 1

இந்நகராட்சியில் நகரமைப்பு பிரிவில் ஏற்கனவே சஙகிலியாளர் பணி நியமனம் செய்யப்படவில்லை இந்நகராட்சி எல்கையில் உள்ள தெருப்பகுதிகள் மட்டும் 1964ம் ஆண்டில் அளந்து பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது நகர புல அளவை பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணி முடிந்துள்ளது. இன்னும் அரசு பதிவேட்டில் பிரசுரிக்கப்படவில்லை. இந்நகராட்சியில் ஏற்கனவே ஒன்பது நகரமைப்பு திட்டஙகள் செயலில் இருந்து வந்துள்ளது. இந்நகரமைப்பு திட்டஙகலில் 1 முதல் 4 வரை இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது

***33. விரிவு மேம்பாட்டுத்திட்டம் :***

இந்நகராட்யில் சட்டப்பிரிவு 12 ன் கீழ் நகரமைப்பு திட்டஙகள் பதிவு செய்யப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றில் நான்கு திட்டஙகள் அமுல்படுத்தப்பட்டுள்ளது. மணப்பாறை பேரூராட்சியில் இருந்து நகராட்சி அந்தஸது 1.10.66 அரசு ஆணை எண். 2318 நாள்.30.9.66 முதல் பெற்றது. அப்போது கண்ணுடையான்பட்டி உசிலம்பட்டி, செவலூர் கலிஙகப்பட்டி ஆகிய கிராமஙகளை உள்ளடக்கி இருந்தது 10.4.74 ம் தேதிய ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசு ஆணை எண். 1959 ன் படி நீக்கம் செய்யப்பட்டு முன்னாள் பஞ்சாயத்து பகுதியான செவலூர் கிராமம் மட்டும் தற்போதைய நகராட்சியின் எல்லையாக நிர்ணயிக்கப்பட்டது.

விரிவு அபிவிருத்தி திட்டஙகள் காலவரையினை நீடித்து தரக்கோரி அரசுக்கு விண்ணப்பிக்க மன்றத்தின் முன் பொருள் வைக்கப்பட்டதில் அன்றைய நகர்மன்றம் தனது 2.1.74 ம் தேதிய தீர்மான எண்.437ல் நகராட்சி நிதிநிலை சரியில்லாத காரணத்தால் 10 ஆண்டு காலத்திற்கு திட்டஙகள் அமுல்படுத்துவதை தள்ளிப்போட தீர்மானித்தது. பின்னர் விரிவு அபிவிருத்தி திட்டஙகளை 1 முதல் 4 வரை நகர் ஊரமைப்பு இயக்குநரால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் உள்ளுர் திட்டக்குழுமத்திற்கு அரசால் 1989ம் ஆண்டில் இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இக்குழுமம் தனித்து மணப்பாறை உள்ளுர் திட்டக்குழுமம் என அறிவிக்கப்பட்டு உள்ளது. மணப்பாறை நகராட்சிப் பகுதி தற்போது நில அளவை துறையினரால் நில அளவை செய்யப்பட்டுள்ளது. இன்னும் அரசிதழில் நில அளவை பற்றிய அறிக்கை வெளியிடப்படாத நிலையில் உள்ளது.

மணப்பாறை நகராட்சிப்பகுதிக்கு காவேரி குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் வசதி கிடைக்கப்பெற்றுள்ளதால் வளர்ச்சிகள் பல்வேறு வகைகளில் ஏற்பட்டுள்ளது. தற்போது, ஏற்பட்டுள்ள வளர்ச்சிகள் திட்ட உத்தேசஙகளுக்கு ஏற்றதாக இல்லாமல் மாறுதல் செய்ய வேண்டியுள்ளது. இந்நகராட்சியில் மேற்படி உத்தேசஙகளை தயாரிக்கவும் அமுல் படுத்தவும் போதிய அலுவலர்களும் பணியாளர்களுக்கும் மாதம் மாதம் ஊதியம் வழஙக நிதிநிலையும் இல்லை. தற்போது நகரமைப்பு பிரிவில் நகரமைப்பு ஆய்வர்

ஒருவர் மட்டுமே உள்ளார். நில அளவை பதிவேடுகள் இல்லாமையால் நகரளவை சஙகிலியாளரும் நியமிக்கப்படவில்லை. மேலும், பொருளாதார நிதிக்குறைவின் காரணமாக பொதுநிதியிலிருந்து ஒருவிழுக்காடு தொகையை உள்ளூர் திட்டக்குழுமம் ஒதுக்கீடு செய்ய இயலாத நிலை உள்ளது.

***35. வரைகடப்புகள்***

இந்நகராட்சியில் பராமரிப்பிலுள்ள தெருக்கள் யாவும் 1948 ம் ஆண்டு சர்வே செய்யப்பட்டவை நகரளவையர் பதவி இவ்வலுவலகத்தில் இல்லாமையால் பஞ்சாயத்து சர்வேயரைக் கொண்டு தெருக்களில் ஏற்படும் வரை கடப்புகளை அளந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது. தற்பொழுது, துணை இயக்குநர், நில அளவை திருச்சிராப்பள்ளி அவர்களால் மணப்பாறை நகராட்சிக்கு அயற்பணி அடிப்படையில் ஒரு நகர்சார் ஆய்வாளரும் ஒரு சங்கிலியாளர் நியமனம் செய்யப்பட்டு ஜீன் 2009 முதல் பணிபுரிந்து வருகின்றனர்.

***தொழிற்பகுதியாக அறிவித்தல்:***

***36.) இ***ந்நகராட்சியில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தொழிற் பகுதிக்கு கூடுதலாக குளித்தலை சாலையில் ஏற்பட்டுள்ள ஒரு தொழிற்சாலை பகுதிகளை தொழில் பகுதியென அறிவிக்க அரசினரின் இணக்கம் பெறப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**37)** மக்கள் தொகையில் நபர் ஒன்றுக்கு வருமானம் கீழ்க்கண்டவாறு உள்ளன.

சொத்து வரி ––213 சதவிகிதம்
தொழில் வரி –– 48 சதவிகிதம்

***சொத்துவரி கேட்பு வசூல் நிலுவை விவரம்***

( லட்சத்தில்)

| | நடப்பு | நிலுவை | மொத்தம் |
|---|---|---|---|
| கேட்பு | 106.79 | 116.47 | 223.26 |
| வசூல் | 76.51 | 27.57 | 104.08 |
| நிலுவை | 30.28 | 88.90 | 119.18 |

வழக்கில் உள்ளவை –– 64.96 லட்சம்

அலுவலக கட்டிடங்கள் –15.02

அறிக்கை ஆண்டில் **1.10.98** முதல் சொத்துவரி சீராய்வு செய்யப்பட்டது வரிவிதிப்புத்தொகை அதிகம் என நகராட்சியின் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. முடிவுற்ற வழக்குகளுக்கு நீதிமன்ற தீர்ப்பின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*__பொது வருவாய்__*

சொத்துவரி **81 (1)**ன் படி சொத்துவரியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவை சேர்ந்துள்ளன.

| | வருட வாடகை மதிப்பில் அரைவருட விதிகம் (1994 – 95) முதல் | |
|---|---|---|
| 1) | பொதுக்காரியங்களுக்கு | 4 |
| 2) | கக்கூஸ வரி | 1 |
| 3) | தண்ணீர் சாக்கடை வரி | 6 |
| 4) | விளக்குவரி | 1.5 |
| 5) | கல்வி வரி | 2.5 |

**காலி நில வரி**

அரசாணை எண் **151** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் **20.8.2009**ல் வெளியிடப்பட்டுள்ள விதிகளின்படி, காலிமனை வரி விதிப்புகளை **1.10.2009** முதல் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.**41802/2009**/ஆர்**1** நாள் **7.9.2009** தெரிவித்தள்ளவாறு நகர்மன்ற தீர்மான எண் .**1115** நாள்.**30.10.2009**ன்படி சதுரக்கான தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளவா.ற காலிமனை வரிவதிப்பு செய்யப்பட்டு வருகிறது.

ரூ.**1000/–** க்கு ரூ.**17/–** தொழில் வரிஅரசு ஆணை எண்.**11** நாள்.**12.1.99**ன் படி புதிய தொழில்வரி சட்டம் அமுலுக்குவந்துள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.**38714/08**/ஆர்**1** நாள் **13.8.2008**ன்படி தொழில்வரி சீராய்வு செய்யப்பட்டு தொழில்வரி திருத்தம் செய்யப்பபட்டு அதன்படி வரிவிதிப்பு செய்யப்பட்டு தொழில் வரி வசூல் செய்யப்பட்டு வருகிறது.

__வரி விதி*ப்பு விகிதஙகள்*__

வ.எண். அரைவருட வருமானம் மொத்தச்சம்பளம் அரைவருடவரி

| | | |
|---|---|---|
| 1) | ரூ.21000 வரை வரி இல்லை | |
| 2) | ரூ.21000 முதல் 30, 000 முடிய | ரூ. 98/– |
| 3) | ரூ.30001 முதல் 45,000 முடிய | ரூ. 244/– |
| 4) | ரூ.45001 முதல் 60,000 முடிய | ரூ. 488/– |
| 5) | ரூ.60001 முதல் 75,000 முடிய | ரூ. 731/– |
| 6) | ரூ.75000 க்கு மேல் | ரூ. 975/– |

மிதிவண்டி, வாகனருதிகளின் வரிபிரிவு **98 –** ன் படி

1) ஒன்றுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட பிராணிகள்இழுக்கக்கூடிய இரண்டு சக்கர வண்டி ஒவ்வொன்றுக்கும் ரூ.**8.00**

2) மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட

| | | |
|---|---|---|
| | பிராணிகள்இழுக்கக்கூடிய இரண்டு சக்கர வண்டி ஒவ்வொன்றுக்கும் | ரூ. 8.00 |
| 3) | எருது அல்லது எருமைக்கடா ஒன்றுக்கு | ரூ.15.00 |
| 4) | பன்றி ஒவ்வொன்றுக்கும் | ரூ. 5.00 |
| 5) | வெள்ளாடு ஒவ்வொன்றுக்கும் | ரூ. 5.00 |
| 6) | இரட்டை மாட்டுவண்டி | ரூ. 8.00 |
| 7) | ஒற்றைமாட்டுவண்டி | ரூ. 4.00 |
| 8) | கைவண்டி. | ரூ. 4.00 |

அனைத்து வரி நிலுவை வழக்கின் காரணமாகவும் அரசுத்துறை கட்டிடஙகளை சார்ந்தவையாகும்.

16) <u>தொழில்வரி</u>

<u>தொழில்வரி கேட்பு வசூல் நிலுவை விவரம்</u>

(ரூபாய் லட்சத்தில் )

| | | நிலுவை | நடப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | கேட்புத்தொகை | 12.84 | 20.35 | 33.19 |
| 2. | மொத்த வசூல் | 2.45 | 17.33 | 19.78 |
| 3. | நிலுவை | 10.39 | 3.02 | 13.41 |

<u>34) பொருளாதார நிலை ரொக்கமாக முதலிடு வழியாக</u>

(ரூபாய் லட்சத்தில் )

| | |
|---|---|
| ஆரம்ப கையிருப்பு | 55.82 |
| எல்லா இனஙகளுக்கும் சேர்த்துவரவு | 502.41 |
| மொத்தம் | 558.82 |
| செலவு | 438.50 |
| முடிவான இருப்பு | 119.73 |

<u>*மூலதன செலவு*</u>

அறிக்கையாண்டில் ஏற்பட்ட மூலதன வரவு மற்றும் *செலவு* தொகை எதுமில்லை.

<u>*கடன் தொகை செலுத்தியது*</u>

31.3.2009 ல் கடன் பிலுவை ரூ.200.39

<u>*தணிக்கை:*</u>

| | |
|---|---|
| அறிக்கை ஆண்டில் தொடக்கத்தில் இருந்து தணிக்கைத்தடைகள் | -- 2228 |
| அறிக்கையாண்டில் வரப்பெற்றது | |
| மொத்தம் | -- -- |
| அறிக்கை ஆண்டில் முடிவு பெற்றவை | |

தணிக்கைத்தடை நிலுவையில் உள்ளதை நிவர்த்தி செய்ய துரிதநடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

மணப்பாறை நகராட்சியின் கட்டுப்பாட்டில் நகராட்சி நடுநிலைப்பள்ளி மற்றும் நகராட்சி துவக்கப் பள்ளி 4 ஆகிய மூன்று பள்ளிகளிலும் சத்துணவு மையஙகள், பள்ளிச்சத்துணவு ( SCHOOL NOON MEAL ) என்ற பெயறில் செயல்பட்டு வருகிறது. 5 வயது முதல் 14 வயதுள்ள ஆண் பெண் இருபாலருக்கு சுமார் 270 பேர்கள் நாள் ஒன்றுக்கு மதியஉணவு அருந்தி வருகிறார்கள். சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் மூலம் அனுமதிக்கப்படும் மான்யத்தில் (ADVANCE GRANT) இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. சமூகநலத்துறை கீழ்க்கண்டுள்ள திட்டஙகளை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது அதன் விவரம்

1) முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதிஉதவித்திட்டம்
2) இராமாமிர்தம்மையார் திருமண நிதி உதவி திட்டம்
3) மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு வஙகி மூலம் கடன் வழஙகும் திட்டம்.

மேற்கண்டுள்ள திட்டஙகளில் பொதுமக்களுக்கு நிதி வழஙகப்பட்டுவருகிறது.

இந்நகராட்சியில் நன்முறையில் செயல்பட்டு வருவதோடு பொதுமக்கள் அதனால் அனைத்து பயன்களும் அடைந்து வருகின்றனர்.

# முடிவுரை

இந்நகர மக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர் வசதி. பொது சுகாதார வசதி மற்றும் தெரு விளக்கு வசதிகள் அனைத்தையும் தொய்வில்லாமல் வழங்கி நகராட்சி நிதி நிலையினைக் கருத்தில் கொண்டு பொது மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றும் வகையில் இந்நகராட்சியில் அனுப்பப்படும் கருத்துரைகளை ஏற்று அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைத்த இந்நகர் மன்றத் தலைவர், நகர்மன்ற துணைத் தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். இதுபோல் இந்நகராட்சியின் முன்னேற்றத்திற்கு பல்வேறு திட்டப்பணிகளை முழுமையாகவும் துரிதமாகவும் செயல்படுத்த முழு ஒத்துழைப்பும் ஆதரவும் அளித்த அனைத்து உள்/வெளி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரையும் பாராட்டி நன்றி கூறி இவ்வறிக்கையினை முடிக்கிறேன்.

**ஆணையர்**
**மணப்பாறை நகராட்சி**